# றும் பூ 10 ரூபாய்.. லவணி 15 ரூபாய்.. லோ 27 ரூபாய்...



## - பட்ஜெட் பற்றி மக்கள் கருத்து !

க்குத் தெரியாது. ஆனால், அந்த பட்ஜெட்டால் பெட்ரோல், டீசல் விலை ஏறிட்டுதுன்னு எல்லாரும் சொல்றாங்க. இதனால் இளநீர் எடுத்து வர செலவுகள் அதிகமாவதால் இளநீர் விலையை அதிகமாக்க வேண்டியிருக்கிறது. விலை அதிகமாக இருப்பதால் இளநீர் வியாபாரம் கம்மியாக இருக்கு. நல்ல வருவாய் கிட்டாததால் சம்பளம் கம்மியாகக் கிடைக்குது. இதனால், குடும்பம் நடத்தக் கஷ்டமா இருக்கு.


மதிவாணன்


சுதாகர்


ராஜா முகம்மது

**ஜனா,**
***சிமெண்ட் விற்பனையாளர்.***

ஒவ்வொரு பட்ஜெட்டின் போதும் சிமெண்ட் விலை மூட்டைக்கு 5 ரூபாய் ஏறும். இப்பொழுது 25 ரூபாய் ஏறியுள்ளது. இது நடுத்தர மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. விலை ஏறினாலும் வீடு கட்டுபவர்கள் சிமெண்ட்டை வாங்கித்தான் ஆக வேண்டும். அதனால் எங்களுக்கு விற்பனைக் குறைய வாய்ப்பில்லை. அதே சமயத்தில் வீடு கட்டும் நடுத்தர மற்றும் ஏழை மக்களின் நிலை என்னவாகும்? அதை அரசாங்கம் யோசிக்க வேண்டும்.

**தாமோதரன்,**
***ஆட்டோ ஓட்டுனர்.***

மனிதனின் அத்தியாவசியத் தேவையான உணவுப் பொருட்களான அரிசி, பருப்பு விலை எல்லாம் குறைய மாட்டேங்குது. அதற்கு இந்த பட்ஜெட் வழி வகுக்கவில்லை. மாறாக பெட்ரோல், டீசல் விலையை ஏற்றி அதன் மூலம் அரிசி, பருப்பு விலையை ஏற்றிவிட்டுள்ளது இந்த பட்ஜெட். செட்டாப் பாக்ஸ், பலூன், பொம்மை, மைக்ரோ ஓவனுக்கு எல்லாம் வரிச் சலுகை கொடுத்ததற்குப் பதிலாக பெட்ரோல், டீசலுக்கு வரிச் சலுகை கொடுத்திருக்கலாம்.

**வெங்கடேசன்,**
***சாஃப்ட்வேர் விற்பனைப் பிரதிநிதி.***

இந்த பட்ஜெட்டால் சிகரெட் விலை அதிகமாகும். இதனால் சிகரெட் புகைப்பவர்கள் அதிலிருந்து விடுபட வாய்ப்பு உள்ளது. செட்டாப் பாக்ஸ், மொபைல் ஃபோன் எல்லாம் அத்தியாவசியம் கிடையாது. அவற்றுக்கு வரிச் சலுகை என்பது தேவையில்லாத ஒன்று. ஆனால் பெட்ரோல், டீசல் விலை ஏறுவதால் அத்தியாவசியப் பொருட்களின் விலை எகிறப் போகிறது. இதனால் நடுத்தர, அடித்தட்டு மக்கள் பாதிக்கப்படப் போகிறார்கள்.

**பார்த்திபன்,**
***ஆட்டோ ஓட்டுனர்.***

இந்த பட்ஜெட்டில் விவசாயக் கடன் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். இதனால், பலனடைபவர்கள் வசதி வாய்ப்பு உள்ளவர்கள் மட்டுமே. எல்லோருக்கும் லாபம் கிட்டும் வண்ணம் இல்லை இந்த பட்ஜெட். இந்த அரசியல்வாதிகள் மக்களுக்கும் நாட்டுக்கும் நல்லது செய்வதில்லை. மாறாக, வாரிசுகளுக்கு சொத்து சேர்ப்பதில்தான் குறியாக இருக்கிறார்கள்.

